இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 26.05.2026

# குற்றத்தை மறைக்கும் விஜய் ஆட்சி!

போலீஸ் ராஜ்யம் நடத்தத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

'கடைக்குப் போகிறேன்' என்று ( 21 ஆம் தேதி) அனுப்பி வைக்கப் பட்ட சிறுமி அவர். காணவில்லை. அரைமணி நேரத்தில் அந்தக் குடும்பத்தினர் தேடுதலைத் தொடங்கி காவல்துறைக்குப் புகார் கொடுக்கிறார்கள். 22 ஆம் தேதி இரவு கண்ணம்பாளையம் குளக் கரையோரம் உள்ள முட்புதரில் சிறுமியின் உடல் கண்டெடுக்கப் பட்டுள்ளது. அருகில் இருந்த தென்னந்தோப்பில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார் சிறுமி.

இதை அறிந்து ஆத்திரம் அடைந்த உறவினர்கள் சிங்காநல்லூர் மருத்துவமனை முன்பும், காவல் நிலையம் முன்பும் முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். சாலை மறியல் செய்தார்கள். சிறுமியின் உடலை வாங்க மாட்டோம் என்று பெற்றோரும் உறவினர்களும் சொன்னார்கள். இப்படி பொதுவெளியில் வெளிச்சம் ஆனபிறகுதான் காவல் துறை செயல்பட்டுள்ளது. குற்றவாளிகள் கைது செய்யப்பட் டார்கள். இந்தக் குற்றவாளிகளும் சிறுமியைத் தேடுவது போல நாடகம் ஆடி இருக்கிறார்கள். பின்னர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**பெற்றோருக்குப் போன் செய்த காவல் துறை அதிகாரிகள், 'சிறுமி உயிரோடுதான் இருக்கிறார்' என்று முதலில் சொல்லி இருக்கிறார்கள். பின்னர், 'சிறுமி இறந்து விட்டார்' என்று சொல்லி இருக்கிறார்கள். காவல் துறையின் முதல் தவறு இது.**

இதன் உண்மை நிலையை விளக்க வேண்டும் என்று பெற்றோரும் உறவினர்களும் சாலை மறியல் செய்தார்கள். சிறுமியின் உடலை வாங்க மாட்டோம் என்று சொன்னார்கள். அதன்பிறகும் காவல் துறை அதிகாரிகள் தந்திரமாக நடந்துள்ளார்கள்.

**சிறுமியின் தந்தையை மட்டும் தனியாக அழைத்துச் சென்ற போலீசார் அவரிடம் மட்டும் பேசி இருக்கிறார்கள். "சிறுமியின் உடலை மருத்துவ மனையின் பின் வாசல் வழியாக எங்களுக்குத் தெரியாமல் ஊருக்கு அனுப்பி வைத்துள்ளனர். சிறுமியின் அப்பாவை தனியாக அழைத்துப் பேசி, தாய்க்குக் கூட தெரியாமல் உடலை அனுப்பி வைத்துள்ளார்கள்" என்று சிறுமியின் சித்தி பேட்டி அளித்துள்ளார்.**

தடயம் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக சடலத்தை எரித்துவிட் டதாக தாயார் குடும்பத்தினர் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். தனக்குத் தெரியாமல் தனது குழந்தையின் உடலை எரித்துவிட்டதாக சிறுமி யின் தாயார் கதறு கிறார்.

**"உடற்கூறாய்வு முடிந்த பிறகு எனது மகளை என் கண்ணில் காட்ட வில்லை. பின் வாசல் வழியாக ஆம்புலன்ஸ் மூலம் சொந்த ஊருக்குக் கொண்டு சென்று விட்டனர். வாடகைக்கு கார் பிடித்து நாங்கள் மேட்டூர் சென்றோம். எனது சம்மதம் இல்லாமல் என் குழந்தையின் உடலை எரித்து விட்டார்கள். நான் குழந்தையின் முகத்தைக் கூட பார்க்கவில்லை. சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதால் எரித்துவிட்டார்கள். நான் கையெழுத்துப் போட மாட்டேன் என்று சொன்ன பிறகு என் கணவ ரிடம் கையெழுத்து வாங்கி உடலை ஒப்படைத்துவிட்டார்கள். எதற்காக போலீஸார் இப்படிச் செய்தார்கள் எனத் தெரியவில்லை. நாங்கள் மேட் டூர் சென்றபோது என்னை அடிக்க வந்தனர். எங்களுக்கு பலர் மீதும் சந்தேகம் உள்ளது" என்று சொல்லி இருக்கிறார் சிறுமியின் தாய்.**

"தகவல் அறிந்து நாங்கள் மேட்டூர் சென்ற போது குழந்தையின் சடலம் எரிக்கப்பட்டு இருந்தது. அனைத்துச் சடங்குகளையும் எங்க ளுக்குத் தெரியாமல் முடித்து விட்டார்கள். சிறுமி கொலை தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கிறது. நீதிமன்றத்தை நாட இருக்கி றோம். கோர்ட் உத்தரவுப்படி உடலைத் தோண்டி எடுக்கக் கூடாது என்பதற்காக எரித்துள்ளார்கள்" என்று சிறுமியின் சித்தி பேட்டி அளித் துள்ளார்.

**எதற்காக போலீஸ் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? பாதிக்கப்பட் டவர் பக்கம் நிற்பது தானே அரசு? இப்படிச் சொல்லி ஏமாற்றித்தானே வாக்கு களைப் பெற்றார் விஜய்? சிறுமியின் அம்மாவைப் பார்த்து, 'இவரை மனநல மருத்துவமனையில் சேருங்கள்' என்று ஒரு போலீஸ் அதிகாரி சொல்லி இருக்கிறார். இதுதான் பாதிக்கப்பட்டவருக்கு ஆறுத லாக இருக்கும் முறையா? பேட்டிக்கு முன்னதாக போலீஸ் அதிகாரிகள் சிரித்துக் கொண்டிருந்த காட்சியை ஊடகங்களில் பார்த்தோம். சிறுமிக்கு நடந்த கொடூரம் குறித்து கேட்டபோது, தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா சிரிக்கிறார். இதுதான் விஜய் ஆட்சியின் லட்சணம்.**

**இது உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினை வூட்டுகிறது. 2020 அக்டோபர் மாதம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒரு அப்பாவிப் பெண், நான்கு பேரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டார். இறந்த அந்த பெண்ணின் உடலை அவர்களது குடும்பத்துக்குக் கூட காட்டாமல், தராமல் போலீஸே எரித்துவிட்டார்கள். அந்தப் பெண்ணின் தந்தையை கடத்தி வைத்துவிட்டு இதனை செய்திருக்கிறார் கள். கொலை செய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்தை யாரும் பார்க்க அனுமதிக்கவில்லை. அந்தப் பெண்ணின் குடும்பத்தை வீட்டுச் சிறையில் வைத்தார்கள். ஹத்ராஸ் பாலியல் வன்கொடுமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற கேரள பத்திரிக்கையாளர் சித்திக் காப்பான் கைது செய்யப்பட்டார். இப்படி ஒரு காட்சியைத் தான் தமிழ்நாட்டிலும் அரங்கேற்றி வருகிறார் முதலமைச்சர் விஜய்!**

●●

மேகதாதுவில் அணைகட்டும் முயற்சியை தொடக்கத்திலேயே முறியடிக்க வேண்டும்! மேகதாது பிரச்சினை:

# ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் துரோகம்!

## கர்நாடக துணை முதலமைச்சரின் பேச்சுக்கு – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு கண்டனம்!

**சென்னை, மே 26 -**

**மேகதாது அணையைக் கர்நா டகம் கட்டுவது என்பது, ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டுக்கு இழைக்கும் துரோகம் என்று கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தெரிவித் துள்ளார்.**

**இது குறித்து கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர் கள் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-**

மேகதாதுவில் அணை கட்டும் புதிய விரிவான திட்டத்தை ஒன் றிய அரசிடம் வழங்கப் போவ தாக கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் சொல்லி இருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் இதனை வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

### ஆணவப் போக்கைக் காட்டுகிறது!

காவிரியின் குறுக்கே மேகதா துவில் அணை கட்டும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் டி.கே.சிவக்கு மார் அவர்கள் சொல்லி இருப்பது அவரது ஆணவப் போக்கைக்



காட்டுகிறது. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்து விட்டது. பலவீன மான கூட்டணி அரசுதானே அமைந்துள்ளது என்ற எண்ணத் தில் சிவக்குமார் இப்படி பேசி இருப்பது போலத் தெரிகிறது. தங் களது காங்கிரஸ் கட்சியும் ஆட்சி யில் அங்கம் வகிப்பதால் எதிர்ப்பு இருக்காது என்று நினைத்து, துடுக்குடன் வார்த்தைகளை விட்டுள்ளார் அவர்.

மேகதாதுவில் அணை கட்டும் விஷயத்தில் கர்நாடக அரசு உறுதி யாக இருப்பதாக சிவக்குமார் சொல்லி இருக்கிறார். காவிரி நதி யில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட எங்கள் கழகத் தலை வர் எந்தவிதத் தியாகம் செய்ய வும் தயங்க மாட்டார்.

மேகதாது அணையைக் கர் நாடகம் கட்டுவது என்பது, ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டுக்கு இழைக்கும் துரோகம்.

### டெல்டா விவசாயிகள் மத்தியில் பெரும் அச்சம்!

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் படி, காவிரியின் கீழ்ப்படுகை மாநி லங்களின் முன் அனுமதியைப் பெறாமல் மேகதாதுவில் எந்த வொரு கட்டுமானப்பணியையும் மேற்கொள்ளக் கூடாது. அதை மீறித் தற்பொழுது மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தினை கர் நாடக அரசு முழு முனைப்புடன் செய்து வருவது டெல்டா விவசாயி கள் மத்தியில் பெரும் அச்சத்தை யும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

காவிரி உரிமைகளை நசுக் கும் விதமாக அமைந்துள்ள கர் நாடக மாநில துணை முதலமைச் சரின் பேச்சுக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் இப்போதாவது வாய் திறந்து கண்டிக்க வேண் டும்.

### துவக்கத்திலேயே முறியடிப்பீர்!

தமிழ்நாட்டின் போராட்டங்கள் விழலுக்கு இறைத்த நீராகி விடக் கூடாது. காவிரி விவகாரத்தில் ஒட்டுமொத்தத் தமிழ்நாடும், அனைத்து அரசியல் இயக்கங் களும் ஒரே குரலில் ஒலிக்கிறது. ஒரே உணர்வில் இயங்குகிறது என்பதை, தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள், தங்களுடன் கூட்டணியில் இருக்கும் காங்கி ரஸ் கட்சியின் கர்நாடக அரசுக்கு அழுத்தமாகத் தெரிவிக்க வேண் டும்; மேகதாதுவில் அணை கட்டும் அவர்களது முயற்சியை துவக்கத்திலேயே முறியடிக்க வேண்டும்.

இப்போதாவது இதற்காகவா வது தமிழ்நாடு முதலமைச்சர் வாய் திறந்து பேசுவாரா என மக்கள் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தெரி வித்துள்ளார்.

இராதாபுரம் தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி!

# வரும் நாடாளுமன்றம் - உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கழகம் மிகப்பெரிய வெற்றி பெறும்!

## நெல்லை - பணகுடியில் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, மே 26 -

நெல்லை மாவட்டம், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணி யின் கழக வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு இராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட பணகுடி, வள்ளியூர் ஆகிய பகுதிகளில் தனக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்க ளித்த வாக்காளர்களுக்கு தெருத் தெருவாக சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் பேரவை தலை வர் மு.அப்பாவு பணகுடி யில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசுக்கு ஆதரவாக சுமார் 300 கோடி ரூபாய் செலவில் ஒரு பெரும் 'ரீல்ஸ்' உருவாக்கும் கூட்டம் செயல்பட்டு வரு கிறது. 1,200 தொழில்நுட்ப வல்லுநர்கள், 200 துணை நடிகர்கள் இதற்காகப் பயன் படுத்தப்படுகிறார்கள்.

தினசரி உண்மைக்குப் புறம்பான தகவல்களை இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்கள் மூலம் உருவாக்குகிறார்கள். சுமார் 30,000 வாட்ஸ்அப் குழுக்கள் மற்றும் 2 லட்சம் போலி ஐடிகள் மூலம் இந் தச் செய்திகள் பரப்பப்படு கின்றன. குழந்தைகளை ஈர்க்கும் கார்ட்டூன் வீடி யோக்கள் வரை இவை ஊடுருவியுள்ளன.

தற்போதைய முதல்வர், பெண் ஒருவரின் மரணத் திற்கு 'சி.எம். சார், அந்த உயிரைத் திரும்பக் கொடுக்க முடியுமா?' என்று கேள்வி எழுப்பி கடுமையாக விமர் சித்தார். அதேபோன்ற ஒரு சூழல் தற்போது கோயம் புத்தூரில் நடந்துள்ளது.

அங்கு 10 வயதுக் குழந்தை ஒன்று கடத்தப்பட்டு, பாலி யல் வன்கொடுமைக்கு உள் ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் மூன்று நான்கு நாட்களாகப் பெற்றோர் களை அலைக்கழித்த பிறகே காவல்துறை வழக்குப்பதிவு செய்து, தற்போது உடற் கூறாய்வுக்குப் பின் உட லைப் பெற்றோரிடம் ஒப்ப டைத்துள்ளது.

குழந்தையை இழந்து கத றும் பெற்றோர்களிடம்,



இனி இப்படி ஒரு சம்பவம் நடக்காது என்ற ஒரு மாயை யான வாக்குறுதியை அளித்துதான் இவர்கள் வாக்குகளை பெற்றுள்ளனர். ஆனால் வெற்றி பெற்ற பிறகு ஒரு தொலைபேசி வாயிலாகக் கூட அந்தப் பெற்றோருக்கு முதல்வர் ஆறுதல் தெரிவிக்கவில்லை. தேர்தலின் போது எவ்வாறு ரீல்ஸ்கள் மூலம் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டதோ, அதேபோல தற்போதும் வலைதளங்களில் ஆறுதல் கூறுவது போன்ற பதிவு களை மட்டுமே அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் பொதுமக்களின் கொந்தளிப்பைத் தாங்க முடியாமல், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற சம் பவங்கள் நடந்த உடனே பாதிக்கப்பட்ட பெற்றோ ரைத் தொலைபேசியில் அழைத்து ஆறுதல் கூறி, தகுந்த பாதுகாப்பு மற்றும் நிதியுதவிகளைச் செய்து, குற்றவாளிகளுக்குக் கடுமை யான தண்டனை பெற்றுத் தந்தார்.

ஆனால் தற்போதைய முதல்வர், ஐந்து நாட்களுக் குப் பிறகே முன்னாள் முதல் வரின் வழியைப் பின்பற்றி தொலைபேசியில் அழைத்து ஆறுதல் கூறியுள்ளார். இதன் மூலம் அவர்களின் ஏமாற்று வேலை மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டது.

அ.தி.மு.க., தி.மு.க. கூட் டணி ஆட்சி அமையுமா?" என்ற கேள்விக்கு பதில ளித்த அவர்,

ஜெயலலிதா மறைவுக் குப் பிறகு அ.தி.மு.க.வில் குழப்பம் நிலவியபோது ஆளுநர் நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைத்து ஆட்சி அமைக்கக் கோரினார். தி.மு.க. வசம் அப்போது 107 எம்.எல்.ஏ.க் கள் இருந்தனர். பெரும் பான்மைக்கு 118 பேர் தேவை ஆனால் "குறுக்கு வழியில் நான் ஆட்சிக்கு வர விரும்ப வில்லை. 118 பேரின் ஆதர வுடன் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டால் மட்டுமே முதல்வராக அமர்வேன். அதுவரை பிரதான எதிர்க் கட்சியாகவே செயல்படு வேன்" என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

தி.மு.க. தலைவர் தெளி வாகவே தனது நிலைப் பாட்டை அறிவித்துள்ளார். மக்கள் எங்களை எதிர்க்கட் சியாக அமர்த்தியுள்ளனர். அதனால் பிரதான எதிர்க் கட்சியாகவே செயல்படு வோம். குறுக்கு வழியில் ஆட்சிக்கு வர விருப்ப மில்லை என்று தெரிவித் துள்ளார்.

மின்சார வாரியத்தின் கடன் நிலை குறித்து பேசிய மு.அப்பாவு, "2011ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியி லிருந்து விலகியபோது மின் வாரியத்தின் மொத்தக் கடன் ரூ.43 ஆயிரம் கோடி மட்டுமே இருந்தது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சிக் காலத் தில் தரமற்ற நிலக்கரி இறக் குமதி, அதிக விலைக்கு கொள்முதல், சோலார் ஒப் பந்தங்களில் முறைகேடு போன்ற பல்வேறு காரணங் களால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பு ஏற் பட்டுள்ளது. இதை சி.ஏ.ஜி. அறிக்கையும் சுட்டிக்காட்டி யுள்ளது. அதுவே தற்போது மின்வாரியம் பெரும் கட னில் சிக்க காரணம்.

கொறடா உத்தரவை மீறியதாக கூறப்படும் 25 அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்க விவகாரம் குறித்து விளக்கம் அளித்த அவர், "கட்சித் தாவல் தடைச் சட் டத்தின்படி, கட்சியின் சின் னத்தில் வெற்றி பெற்று பின் னர் கட்சி உத்தரவுக்கு எதிராகச் செயல்பட்டால் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க முழு அதிகாரம் உள் ளது. டி.டி.வி. தினகரன் ஆத ரவு எம்.எல்.ஏ.க்கள் வழக் கில் எடுத்த நடவடிக்கையும், அதனை நீதிமன்றம் உறுதி செய்த தீர்ப்புகளும் இதற்கு முன்னுதாரணமாக உள்ளன.

இன்று காக்ரோச் ஜனதா பார்ட்டி என்று ஒரு அமைப்பை உருவாக்கி உள் ளார்கள். வேலையில்லாத இளைஞர்களை கொச்சைப் படுத்தி பேசியதின் விளை வாக ஜென்சி" (GenZ) என்று அழைக்கப்படும் இன்றைய இளம் தலைமுறையினர் லட்சக்கணக்கில் ஒன்றி ணைந்து இந்த "காக்ரோச் ஜனதா பார்ட்டி" என்ற அமைப்பை உருவாக்கியுள் ளனர். இந்த இளைஞர் சக்தி (காக்ரோச்) மிக விரைவில் அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அ.தி.மு.க.வின் சின்னமான இலையையும், பா.ஜ.க.வின் சின்னமான 'தாமரையை யும் இந்த "காக்ரோச்" சாப் பிட்டு முடித்துவிடும் என்று தோன்றுகிறது. மேலும் காக்ரோச் போடும் இரைச் சலில், விசில் சத்தம் காணா மலேயே போய்விடும். யார் எவ்வளவு பொய்ப் பிரச் சாரம் செய்தாலும் மக்கள் அதை நம்பமாட்டார்கள். தி.மு.க. என்பது கொள் கைப் பிடிப்புள்ள இயக்கம், ஆட்சி அதிகாரத்திற்காக எதையும் செய்பவர்கள் அல்ல. வரவிருக்கும் நாடாளுமன் றம் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களிலும் தி.மு.க. கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இவ்வாறு அவர் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஜோசப் பெல்சி, அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட பொறுப் புக் குழு உறுப்பினர் நம்பி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பணகுடியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் ஜோசப் பெல்சி, அலெக்ஸ் அப்பாவு உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.